අග්‍රාමාත්‍ය කාර්යාලය - සංහිඳියා යාන්ත්‍රණ පිළිබඳ සම්බන්ධීකරණ ලේකම් කාර්යාලය
பிரதம அமைச்சர் அலுவலகம் - நல்லிணக்கப் பொறிமுறைகளைக் கூட்டிணைப்பதற்கான செயலகம்
Prime Minister's Office -Secretariat for Coordinating Reconciliation Mechanisms

# பத்திரிகை வெளியீடுகள்

## நல்லிணக்க பொறிமுறை ஒருங்கிணைப்பு செயலகத்திற்கான செயலாளர் நாயகம் நியமனம்

நல்லிணக்க பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகத்தின் செயலாளர் நாயகமாக திரு. மனோ தித்தவல்ல அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். திரு. மனோ தித்தவல்ல அரச மற்றும் தனியார் துறை ஆகியவற்றில் சிறந்த உயர் தலைமைத்துவ ஆற்றல்மிக்கவராக பரிணமித்திருந்தார்.

திரு. மனோ தித்தவல்ல அவர்கள் அரச தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றியுள்ளதுடன், மூலோபாய தொழில் முயற்சி முகவராண்மை மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் விஷேட செயலணி ஆகியவற்றின் தலைவராகவும் சிரேஷ்ட ஜனாதிபதி ஆலோசகராகவும் கதிர்காமர் நிறுவனத்தின் முகாமைத்துவக் குழு உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

திரு. மனோ தித்தவல்ல அவர்கள் தற்போது EAP குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக பணியாற்றுவதுடன் இலங்கை பிணையங்கள் மற்றும் இலங்கை ஜார்டின் ப்ளெமிங் பிணையங்கள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. மனோ தித்தவல்ல அவர்கள் நிதி மற்றும் மூலதன சந்தை துறைசார் வணிக முகாமைத்துவ பட்டத்தினை எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளதுடன், பிரித்தானிய சந்தை பட்டய நிறுவனத்தின் உறுப்பினராகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

--------------

*நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம்*

www.scrm.gov.lk

ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1, ශ්‍රී ලංකාව
குடியரசுக் கட்டடம், கொழும்பு 1, இலங்கை
The Republic Building, Colombo 01, Sri Lanka
දුරකථන / தொலைபேசி /Phone: +94115920029
ඊ මේල් /மின்அஞ்சல்/Email : contact@scrm.gov.lk